செ.வெ.எண்:25 நாள்:17.10.2020

நாகப்பட்டினம் மாவட்டம்

**தலைஞாயிறு ஊராட்சி ஒன்றியம், வெள்ளப்பள்ளம் மீனவ கிராமத்தில் ரூ.100 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் மீன்பிடித் துறைமுக கட்டுமானப் பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.பிரவீன் பி நாயர்,இ.ஆ.ப அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.**

நாகப்பட்டினம் மாவட்டம் தலைஞாயிறு ஊராட்சி ஒன்றியம், வெள்ளப்பள்ளம் மீனவ கிராமத்தில் ரூ.100 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் மீன்பிடித் துறைமுக கட்டுமானப் பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.பிரவீன் பி நாயர்,இ.ஆ.ப அவர்கள் இன்று(17.10.2020) நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

ஆய்வின் போது மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது,

“ தமிழகத்தில் மீன்பிடித் தொழில் சிறந்து விளங்கும் மாவட்டங்களில் நாகப்பட்டினம் மாவட்டமும் ஒன்றாகும். நாகப்பட்டினம் மாவட்டத்தில் மீன்பிடித் தொழில் முக்கியத் தொழிலாக இருப்பதுடன், வேலைவாய்ப்பு மற்றும் அதிக வருவாயும் தருகிறது. நுகர்வோர்க்கு சிறந்த உணவுப் பொருளாக இருப்பதுடன் இதனைச் சார்ந்த பல உபதொழில்கள் உருவாகவும் இந்த மீன்பிடித் தொழில் மிக முக்கிய காரணியாக திகழ்கிறது.

நாகப்பட்டினம் மாவட்டம், வெள்ளப்பள்ளம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள மீனவ கிராமங்களில் சுமார் 9176 பேர் வசித்து வருகிறார்கள். இப்பகுதி மீனவர்களுக்கு சொந்தமாக 490 நாரிழைப் படகுகள் மற்றும் 80 கட்டுமரங்கள் ஆகியவை மீனபிடித் தொழிலில் பயன்படுத்தப்படுகின்றன. இந்த படகுகளை பாதுகாப்பாக நிறுத்துவதற்கும், மீன்களை இறக்கி சுகாதாரமான முறையில் சந்தைப்படுத்துவதற்கும், வலைகளை பின்னுவதற்கும் தேவையான அடிப்படை வசதிகள் இல்லாமல் உள்ளது,

இப்பகுதி மீனவ மக்களின் குறைகளை நிவர்த்தி செய்யும் வகையில் வெள்ளப்பள்ளம் கிராமத்தில் ரூ.100 கோடி மதிப்பீட்டில் மீன்பிடித் துறைமுகம் அமைக்கும் பணி தொடங்கி நடைபெற்று வருகின்றன.

இந்த மீன்பிடித் துறைமுகத்தில் தெற்குபுறத்தில் 1300 மீட்டர் நீளத்திற்கும், வடக்குப்புறத்தில் 1080 மீட்டர் நீளத்திற்கும் அலைத்தடுப்புச் சுவரும், 240 மீட்டர் நீளமுள்ள படகு அணையும் சுவரும், 2 மீன் ஏலக்கூடங்களும், 2 வலை பின்னும் கூடங்களும், 1 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியும், 1 அலுவலகக் கட்டிடம் மற்றும் தகவல் தொடர்பு கோபுரம் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் அமையவுள்ளது.

இந்த புதிய மீன்பிடி துறைமுகம் அமைக்கும் பணிகள் நிறைவுற்று, பயன்பாட்டுக்கு வரும் போது, இப்பகுதியைச் சுற்றியுள்ள காமேஸ்வரம், விழுந்தமாவடி, வானவன்மகாதேவி, வெள்ளப்பள்ளம், நாலுவேதபதி, புஷ்பவனம் ஆகிய மீனவ கிராமங்களைச் சேர்ந்த மக்களின் வாழ்வாதாரம் மேம்படும் வகையில் மிகவும் பயனுள்ளதாக அமையும்.” என தெரிவித்தார்.

இந்த ஆய்வின் போது உதவி ஆட்சியர் செல்வி.வி.தீபனாவிஸ்வேஸ்வரி,இ.ஆ.ப, செயற்பொறியாளர்(மீன்வளத்துறை) திரு.முருகேசன், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.மீ.செல்வகுமார், வேதாரண்யம் வட்டாட்சியர் திரு.முருகு உட்பட அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம் மாவட்டம்**